# இயேசு கிறிஸ்துவுக்கு கணக்கு ஒப்புவிக்கும் தலைவர்கள். LC-1

என் ஆண்டவராகிய கிறிஸ்துவுக்கு நான் பொறுப்பாக கணக்கு ஒப்புவிப்பதும் பதிலளிப்பதும் எனது கடமை. அவர் எனது அனைத்து செயல்பாடுகளையும் மதிப்பீடு செய்து வெகுமதி அளிப்பார் என அறிந்து உள்ளேன். எனது ஆண்டவரின் ராஜ்ஜியத்திற்காக தியாகம் மற்றும் மகிழ்ச்சியான சேவை வாழ்க்கைக்கு அழைக்கப்பட்டுள்ளேன் என்பதையும் அறிந்துள்ளேன்.

***2கொரி5:9-10.*** *அதினிமித்தமே நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம். ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்.*

கிறிஸ்துவுக்கு பொறுப்புக்கூறலை வளர்ப்பதற்கான வழிகளைத் தொடங்கவும், பகிர்ந்து கொள்ளவும் தனிப்பட்ட வாழ்வில் ஒரு தலைமைத்துவ மாற்றத்தை தேர்வு செய்யவும்.

- தனது தனிப்பட்ட திறமையை வெளிக்காட்டும் தலைமைத்துவ பண்பிலிருந்து எளிமையான தலைமைத்துவ பண்பினை கடைபிடித்தல்.
- தனது தனிப்பட்ட அந்தஸ்தினை வளர்க்கும் தலைமைத்துவத்திலிருந்து சேவைப்பனி தலைமைத்துவ மனப்பான்மையில் வளருதல்.
- மக்களின் நன்மதிப்பு மற்றும் புகழ்சியை நாடும் தலைமைத்துவத்திலிருந்து, உள்ளத் தூய்மையை நாடும் தலைமைத்துவ பண்பினை வளர்த்துக் கொள்ளுதல்.
- பிறரை கவர்திழுக்கும் செயல்பாடுகளை வளர்த்துக் கொள்ளும் தலைமைத்துவத்திலிருந்து, தனிப்பட்ட வாழ்வில் நேர்மை, உத்தமத்தை நாடும் தலைமைத்துவத்தை வளர்த்துக் கொள்ளுதல்.

- பெரும்பான்மை கூட்ட மக்களின் ஒப்புதலை நாடும் தலைமைத்துவத்திலிருந்து கிறிஸ்துவின் அங்கீகாரத்தை நாடும் தலைமைத்துவத்தை வளர்த்துக் கொள்ளுதல்.

ஆண்டவரே, உமது நாம மகிமைக்காக ஊழியம் செய்கிறேன் என கூறும் நபர்களை பிரியப்படுத்த எத்தனை முறை நான் அடிபணிந்து உமது நாமத்திற்கு மகிமையை செலுத்த தவறியுள்ளேன்.

நான் உண்மையையும், சத்தியத்தையும் பகிரங்கமாக அறிவிக்க வேண்டிய சூழ்நிலைகளில் மவுனம் காத்ததுள்ளேன்.

எனது புகழையும் பேரையும் தக்கவைத்துக் கொள்வதற்கு நான் எத்தனை முறை நேர்மையை சமரசம் செய்துள்ளேன்.

எனது உயர்விற்காக சக ஊழியர்களின் வளர்ச்சிக்கு நான் ஒரு தடையாக இருந்திருக்ககூடும் என்பதை உணர்கிறேன்.

நான் ஆண்டவருக்கு நெருக்கமானவன் என வெளிக்காட்டிக் கொள்வதற்காக சக ஊழியர்கள் மற்றும் சபை விசுவாசிகள் மீது அதிகாரம் மற்றும் ஆளுமை செலுத்துயுள்ளேன்.

ஆண்டவரே என் சுயநல சுபாவ குணத்தை மன்னித்து. பணிவு, தயவு மற்றும் கருணையின் வழியில் என்னை நடத்தி பரலோக வெகுமதியை தேட என் கண்களைப் பயிற்றுவியும்.

எனது ஊழிய வாழ்க்கை மற்றும் எனது தலைமைத்துவதிற்கான நியாயத்தீர்ப்பு குறித்த சிந்தனை மற்றும் பயம் என்னை ஆண்டவரின் வழியில் நடத்தட்டும்.

நான் யார், நான் கிறிஸ்துவுக்கு என்ன செய்கிறேன், மக்கள் என்னைக் குறித்து என்ன கூறுகிறார்கள் என்பதில் கவனம் செலுத்தாமல், கிறிஸ்து என்னைப் பற்றி என்ன சொல்வார் என்பதை முன்வைத்து நான் எதைச் செய்தாலும், கிறிஸ்துவின் நாம மகிமையை விளங்கச் செய்வதாக மட்டுமே இருக்கட்டும். ஆமென்.

# இயேசுவைப் போல
# வாழும் தலைவர்கள். LC-2

எனது வாழ்வில் உள்ளும் புறமும் இயேசுகிறிஸ்துவைப் போல இருக்கவும், எனது இதயத்திலும் வாழ்விலும் அவருடைய குணாதிசயங்களை பிரதிபலிக்கவும் நான் விரும்புகிறேன்.

***தீத்து2:12-15***

*12.நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி,*
*13.நாம் நம்பியிருக்கிற ஆனந்தபாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது.*
*14.அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற் கிரியைகளைச்செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.*
*15.இவைகளை நீ பேசி, போதித்து, சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள். ஒருவனும் உன்னை அசட்டைபண்ண இடங்கொடாதிருப்பாயாக.*

இயேசுவுக்குள் உங்களது வாழ்வு இன்னும் மேம்பட நீங்கள் எடுக்க வேண்டிய ஆவிக்குறிய நடவடிக்கைகள் யாவை.

- தினசரி வேதவாசிப்பில் ஈடுபடுவது மட்டும் அல்லாது வேத ஆராச்சி மற்றும் பிரதிபலிப்பிலும் ஈடுபடுதல் அவசியம்.
- நாம் வாழும் வாழ்வியல் முறையினை ஆய்வுக்குவுட்படுத்தி, இயேசு கிறிஸ்து விரும்பும் வண்ணம் தேவையான மாற்றங்களை கொண்டு வரவேண்டும்.
- இயேசு கிறிஸ்துவை முன்மாதிரியாக வைத்து, உங்களது குணாதிசயங்களை அவரது குணாதிசயங்களோடு ஒப்பிட்டு பார்க்கவும்.

- கிறிஸ்துவைப் போல வாழ உங்கள் வளர்சிக்கு இலக்கை நிர்ணயித்து, அதற்காக உழைக்கவும்.

என் ஆண்டவரே, இயேசு கிறிஸ்து வைப் போல நான் மாற என் இருதயத்தில் ஏக்கத்தை அதிகரியும்.

இயேசுவின் வாழ்க்கையை இன்னும் அதிக கருத்தோடு கற்று அறிந்து, அவற்றினை என் வாழ்வின் வழியாக நேசித்து ஏற்றுக்கொள்ள அருள் தாரும்.

இயேசு கிறிஸ்து சிலுவை மூலமாக காட்டிய அன்பு, தாழ்மை, மன்னிப்பின் வழியில் செல்ல எனக்கு உதவும்.

கர்த்தராகி இயேசுவே, நீர் என்னில் மேன்மேலும் வளர்ந்து, நீர் விரும்புவது போல் என் மனதையும், வாழ்க்கையையும் வடிவமையும்.

உமது பரிசுத்தமான அன்பினால் என் இருதயத்தை அசைத்து, எனது கண்களைத் திறந்தது உமது மகிமையை என் கண்கள் காணச்செய்யும்.

ஒவ்வொரு நொடியும், நிமிடமும், மணி நேரமும் உமது சத்தத்தைக் கேட்டு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும்.

# இயேசுவைப்போல்
# ஊழியம் செய்யும் தலைவர்கள். LC-3

கடவுளின் ராஜ்ஜியத்தை கட்டியெழுப்புவதும் அவர் மக்களின் இதயத்தில் ஆட்சி செய்வதற்காக ஊழைப்பதுவே எனது முக்கிய அழைப்பு என அறிந்துஉள்ளேன், அவ்வாறு இயேசு கிறிஸ்துவின் ஊதியத்தில் நான் கவனம் செலுத்தும்போது எனது குடும்பத்தினர்க்கும் கடவுளின் வார்த்தைகளை போதித்து கடவுளுக்கு பயந்து வளரும் குடும்பத்தை கட்டவும் அழைக்கப்பட்டுள்ளேன் என்பதையும் உணர்கிறேன்.

**3 யோவான் 9:** *நான் சபைக்கு எழுதினேன்; ஆனாலும் அவர்களில் மேன்மையாயிருக்க விரும்புகிற தியோத்திரேப்பு என்பவன் எங்களை ஏற்றுக்கொள்ளவில்லை.*

இயேசு கிறிஸ்துவிற்கு மட்டுமே ஊழியம் செய்ய வாழ்வில் நாம் கடைபிடிக்க வேண்டிய ஆவிக்குறிய ஒழுக்க நெறிமுறைகள் யாவை?

- ஒவ்வொரு நாளும் இரவு தூங்கச் செல்வதற்கு முன் நம்மையும் நமது செயல்பாடுகளையும் சுய பரிசோதனை செய்வது அவசியம்.
- நமது வாழ்க்கை மற்றும் நாம் பயன்படுத்தும் தலைமைத்துவ நடைமுறை மற்றும் யுக்திகளை ஆராய்ந்தது பிரதிபலித்தல்.
- ஒரு தலைவராக நமது நடத்தை குறித்து விமர்சனம் மற்றும் கருத்துக்களை ஆண்கள், பெண்கள், வாலிபர், முதியோர், குழந்தைகள் போன்ற அனைத்து தரப்பிலும் கேட்டறிதல்.
- நமது வழக்கமான உபவாச ஜெபங்களுக்கு அப்பாற்பட்டு, சுயத்தை வெறுப்பதற்கான பிரத்தியேக உபவாச நேரங்களை நாடவேண்டும்.

- நமது வாழ்வின் எல்லை எங்கும் பரிசுத்த வேலி அமைக்கப்பட வேத வசனத்தை வாழ்வில் நடைமுறைப் படுத்துகிறவர்களாகவும், ஜெபத்தில் நடப்பவர்களாகவும், இருதயத்தில் பரிசுத்தத்திற்கான வேட்கை கொழுந்து விட்டு எரியும் வண்ணம், ஆவிக்குறிய புத்தகங்களை நாடி தேடி படிக்கின்றவர்களாக இருக்க விழைய வேண்டும்.

ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவே, உம்மை மட்டுமே நான் நேசித்து, உமக்காகவே வாழ்ந்து, உமது நாம மகிமைக்காக மட்டுமே ஊழியம் செய்கிறவனாய் என்னை வழி நடத்தும்.

சுயத்தை முற்றிலும் வெறுத்து பரிசுத்த ஆவியானவரின் முழுமையான ஆளுகைக்குள்ளாக, நடத்துதலுக்குள்ளாக என் வாழ்வினை ஒப்புவிக்கின்றேன்.

நான் செய்யும் அனைத்து பணிகளிலும் மனிதனின் கிரியையை அல்ல இயேசு கிறிஸ்துவின் கிரியையை மக்கள் காணட்டும்.

சுயம் என்னில் காணாமல் போகட்டும் இயேசு கிறிஸ்துவின் வழியில் நான் நடப்பதையும், கிறிஸ்து என்னில் ஜீவிப்பதை பிறர் காணட்டும்.

இயேசு கிறிஸ்துவைப் போல் என்னைத் தாழ்த்தி எந்த தாழ்வான இடத்திலும், எனக்கு அதிக முக்கியத்துவம் இல்லாத இடத்திலும் தாழ்மையுடன் அவரின் ஊழியத்தினை தொடர்ந்து செய்வேன்.

# இயேசுவைப் போல
# வழிநடத்தும் தலைவர்கள். LC-4

இயேசுவைப் போலவே வழிநடத்தும் ஒரு இருதயத்தை எனக்கு தாரும் ஆண்டவரே.

**லூக்கா 22: 25-27.**அவர் அவர்களை நோக்கி: புறஜாதியாரின் ராஜாக்கள் அவர்களை ஆளுகிறார்கள்; அவர்கள்மேல் அதிகாரம் செலுத்துகிறவர்களும் உபகாரிகள் என்னப்படுகிறார்கள். உங்களுக்குள்ளே அப்படியிருக்கக் கூடாது; உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன். பந்தியிருக்கிறவனோ, பணிவிடை செய்கிறவனோ, எவன் பெரியவன்? பந்தியிருக்கிறவன் அல்லவா? அப்படியிருந்தும், நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன்.

இயேசுவைப் போல வழிநடத்துவதற்கு தனித்துவம் வாய்ந்த ஒழுக்க நெறிமுறைகள், கொள்கைகள், வாழ்க்கைத் தரம் அவசியம்.

ஒவ்வொரு தலைமைத்துவமும் தனித்துவம் வாய்ந்தது, அதைத்தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் விரும்புகின்றார். உங்கள் தலைமைத்துவ பண்பில் நீங்கள் என்ன என்ன புதிய ஒழுக்க நெறிமுறைகளை கடைபிடிக்க வேண்டும், புதிய வாழ்க்கைத் தரத்தை பின்பற்றவேண்டும் என்பதை தீர்மானம் செய்ய வேண்டும்.

- நாம் அதிக பிரயாசப்பட்டு, திட்டமிட்டு நடத்தும் நிகழ்ச்சி முக்கியமல்ல, நாம் எந்த மக்களுக்காக நடத்துகிறோமோ அவர்கள்மீது அதிக கவனம் செலுத்துவது அவசியம். ஆண்டவரின் நாமம் மகிமைபடுவது மட்டுமே அவசியம்.

- சரியான ஊழியத்திற்கு ஆண்டவரோடும், அவர் அனுமதிக்கும் மக்களோடும் நாம் வளர்க்கும் நல்ல நட்பின் அடிப்படையிலான சகோதரத்துவ உறவு கடவுளின் ராஜ்ஜிய வளர்ச்சிக்கு மிகச் சிறந்த அடித்தளமாக அமையும்.
- நமக்கான அந்தஸ்தினைவிட கிறிஸ்துவுக்கான முக்கியத்துவத்தை நாடுவதே சிறந்த ஊழியம்.
- நமக்கு மற்றவர்கள் சேவை செய்ய எதிர்பார்ப்பதைவிட பிறருக்கு சேவை செய்ய விழைவதே சாலச் சிறந்தது.

புகழும், மாட்சிமையும் நிறைந்திருந்தும் தம்மைத் தாழ்த்தி, ஏழ்மைக் கோலமெடுத்து, தாழ்மையின் ரூபமாய், அடிமைத்தனத்தில் கிடந்த எங்களை மீட்க வந்த கடவுளின் மைந்தனாகிய எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே.

உமது நாமத்தினால் பிறருக்கு தியாகத்துடன் கூடிய சேவை செய்யும் ஊழியப் பாதையில் நடக்க வழிவகுக்கும் உம்மை துதிக்கின்றேன்.

ஆண்டவரே எல்லாத் தூய்மையில் பார்க்க என் கண்களையும், இருதயத்தையும் தூய்மைப்படுத்தும். கனிவோடு பிறருக்கு உதவுவதற்கு எனது கரங்களை பயிற்றுவியும்,

யாருக்கும் தெரியாமல் பிறர் புலம்பும் புலம்பலின் சத்தத்தை கேட்க, எனது கேட்கும் திறனை கூர்மைப்படுத்தும்.

கடவுளின் அன்பினால் முற்றிலும் மூழ்கடிக்கப்பட்டு யாரும் செல்ல விரும்பாத இடங்களுக்கு சென்று ஊழியம் செய்ய என்னை அர்ப்பணிக்கின்றேன்.

# தலைவர்களை வளர்க்கும் தலைவர்கள் LC-5

வளர்ந்து வரும் இளைம் தலைவர்களின் வாழ்வு பலப்பட அனுதினமும் ஜெபிக்க எனக்கு எண்ணமும், கிருபையும் தாறும்.

**I தீமோத்தேயு 4:12-16.** உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு. நான் வருமளவும் வாசிக்கிறதிலும் புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு. மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கைகளை வைத்தபோது தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே. நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக்கொண்டு, இவைகளிலே நிலைத்திரு. உன்னைக்குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்.

பல தலைவர்கள், தாங்கள் வழிகாட்டியாக இல்லாததற்குக் காரணம் அவர்கள் ஒருபோதும் வழிகாட்டப்படவில்லை என்று ஒப்புக்கொள்கிறார்கள். வழிகாட்டியான வாழ்க்கையை வாழ கற்றுக்கொள்ள எந்த ஒழுக்கத்தை நீங்கள் ஒருங்கிணைக்க வேண்டும் என்பதை தேர்வு செய்யவும்.

- வேதத்தில், வழிகாட்டும் தலைவர்களைப் பற்றிய வேத ஆராச்சியில் குறிப்பாக மோசஸ் மற்றும் யோசுவா, பால் மற்றும் திமோதி போன்றோரை பற்றி மேலும் அறிந்து கொள்ள தீர்மானித்தல்

- இயேசு கிறிஸ்துவுக்கு கீழ்படிந்து வாழ்வினை, ஊழியத்தினை நடத்தி, ஓட்டத்தை ஓடின கிறிஸ்துவ

தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை படித்து, வழிகாட்டுதல் எவ்வாறு அவரது வாழ்க்கை- வளர்ச்சியை வடிவமைத்தது என்பதைக் கண்டறிதல்.

•வழிகாட்டுதல் திறன் மற்றும் தலைமைத்துவத்தைக் வெளிக்காட்டும் மூத்த தலைவரை நேர்காணல் செய்து, அவரது வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள்ளுங்கள்.

• இயேசு கிறிஸ்துவுடனான உங்கள் அனுதின வாழ்க்கைப் பயணத்தை குறிப்பேடாக தொடர்ந்து எழுதுங்கள். அவர் எவ்வாறு உங்களை அவரின் ஊழியத்திற்கான தலைவராக உருவாக்கி வருகிறார் என்பதை யும் குறிப்பிடுங்கள்.

• ஒரு சக வழிகாட்டி குழுவை உருவாக்கி, பொறுப்புக்கூறல் கணக்கு ஒப்புவிக்கும் உறவுகளுக்குச் சமர்ப்பிக்கவும்.

ஆண்டவரே, எனது வீண் அலைச்சல்களை குறத்து, எனது வேகத்தை தாமதப்படுத்தி, உம்மை மேன்மேலும் அறிய விரும்பும் தலைவர்களோடு அமர்ந்து, குழுவாக எங்களை நாங்களே ஆராய்ந்து, ஒருவரிடமிருந்து மற்றொரு வர் கற்றுக் கொள்ள உதவி செய்யும்.

போராட்டமான சூழ்நிலைகளில் உம்மை பின்தொர்வதைக் குறித்தும், கடவுளுக்கு பயப்படும் பயத்தைக் குறித்தும், தொடர்ந்து தேவ புத்தியிலும், ஞானத்திலும் வளர்வதைக் குறித்து அறிந்து கொள்ள உதவும்.இளம் கிறிஸ்தவ தலைவர்கள் இயேசுவைப் பின்பற்றி வாழும் வாழ்க்கை வாழ அவர்களுக்காக நான் ஜெபிக்க, உழைக்க அர்பணிக்கின்றேன்.

இந்த உலகை விட்டு நான் உம்மிடம் வரும்போது, யாரும் செல்லத் துணியாத இடங்களில் உமது ராஜ்ஜியத்தை விரிவுபடுத்த உறுதிபூண்டிருக்கும் தலைவர்களை உருவாக்கிய பாரம்பரியத் தோடு வருவேன். ஆமென்.

# இயேசு கிறிஸ்துவின் முகத்தை நோக்கிப் பார்க்கும் தலைவர்கள். LC-6

"இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றி, ஜெபத்திலும், அவருடனான தனிப்பட்ட ஐக்கியத்திலும் தொடர்ந்து இயேசு கிறிஸ்துவைத் தேட விரும்புகிறேன். அவர் அளிக்கும் கிருபையினால் அவரின் முகத்தை காண விரும்புகிறேன்.

**மாற்கு: 1 அதிகாரம்.** 35.அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார். 36. சீமோனும் அவனோடே இருந்தவர்களும் அவரைப் பின்தொடர்ந்துபோய், 37. அவரைக் கண்டபோது: உம்மை எல்லாரும் தேடுகிறார்கள் என்று சொன்னார்கள். 38. அவர்களை அவர் நோக்கி: அடுத்த ஊர்களிலும் நான் பிரசங்கம் பண்ணவேண்டுமாதலால், அவ்விடங்களுக்குப் போவோம் வாருங்கள் இதற்காகவே புறப்பட்டு வந்தேன் என்று சொல்லி 39. கலிலேயா நாடெங்கும் அவர்களுடைய ஜெபஆலயங்களில் அவர் பிரசங்கம்பண்ணிக்கொண்டும், பிசாசுகளைத் துரத்திக்கொண்டும் இருந்தார்.

கடவுளின் முகத்தை காணத்துடிக்கும் வாஞ்சை, அவருடன் ஓர் அன்யோன்யமான உறவை வளர்க்கும், அவருடைய பிரசன்னத்தின் மகிழ்ச்சியை அனுபவிக்கஉதவும்.

ஆன்டவரோடு உள்ள அன்யோன்யமான அன்பின் உறவினை மேலும் ஆழப்படுத்துவதற்கு எவ்வித ஒழுக்க நெறி பயிற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.

கடவுளுடனான நெருங்கிய அன்பை ஆழமாக்குவதற்கான ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

- வேதாகமத்தை, வருடத்திற்கு ஒரு முறையாவது முழுமையாக வாசித்து முடிக்க உறுதிமொழி எடுக்கவும்.

- ஆஸ்வால்ட் சேம்பர்ஸ் எழுதிய “மை அட்மோஸ்ட் ஃபார் ஹிஸ் ஹையஸ்ட்” போன்ற பக்தி விருத்திக்கான வாசிப்பு வழிகாட்டி புத்தகங்களை மாதம் ஒன்று வீதம் வருடத்திற்கு பன்னிரண்டு என தேடிப்பிடித்து வாங்கி படிக்கவும்.

- ஆவிக்குறிய ஒழுக்க நெறிமுறைகளை மேலும் கற்று அறிந்து கொள்ள ரிச்சர்ட் ஃபாஸ்டர் எழுதிய செலிப்ரேஷன் ஆஃப் டிசிப்லைனைப் போன்ற புத்தகங்களை படிக்கவும்.

- இருதயத்தின் வாஞ்சைகளை ஆராய்ந்தது அறிய, உங்களின் ஆவிக்குறிய ஆலோசகர் மற்றும் வழிகாட்டியிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நீங்கள் கடவுளின் முகத்தை மட்டுமே தொடர்ந்து நோக்கி நோக்கிப் பார்க்கின்றீர்களா என தங்களுக்கு பொறுப்பை உணர்த்தி உண்மைத்தன்மையை தவறாமல் சரிபார்க்கும் நபர்களை நீங்கள் பெற்றிருக்க வேண்டும்.

உமது சமூகம் எவ்வளவு அற்புதமாகவும் உமது பிரசன்னம் எவ்வளவு அழகாகவும், இனிமையானதாகவும் உள்ளது. ஆண்டவரே, உமக்கு நிகரானவர் எவரும் இல்லை, நீரே எல்லா வற்றிலும் சிறந்தவர். நான் தினமும் உமது முகத்தைத் தேடும் பொருட்டு, உமது மகிமையை எனக்குக் அனு தினமும் எனக்கு காண்பித்தருளும்.

அனு தினமும் உமது முகத்தைத் தேடுவதினால், உமது அன்பின் ஜீவ நீரூற்றில் இருந்து நான் பருகி, மிகுந்த மகிழ்ச்சியையும் ஆழ்ந்த மகிழ்ச்சியையும் காண விரும்புகிறேன்.

ஆம் ஆண்டவரே, உமது பிரசன்னத்திற்காக என் உள்ளத்தில் ஒரு நிலையான அழுகை உள்ளது. ஆனாலும், என் என் ஆத்துமாவின் கதறலை, வேண்டுகோளை புறக்கணித்து நான் மற்ற காரியங்களில் கவனம் செலுத்துகிறேன்.

ஆண்டவரே, என்னை மீண்டும் ஒருமுறை மன்னித்து, உம்மை மேலும் அறிந்து கொள்வதில் என்னை திருப்தியாக்கும். ஆமென்!

# ஆவியின் கனிகளை வளர்த்துக்கொள்ள விழையும் தலைவர்கள். LC-7

இயேசு கிறிஸ்துவின் மகிமைக்காக அதிக கனிகொடுக்க நாம் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்.

**யோவான்15:4** என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்.

ஊழிய வெற்றியில் கவனம் செலுத்துவதிலிருந்துஇ தனிப்பட்ட வாழ்வில் ஆவிக்குறிய வளர்ச்சி மற்றும் பலனை அடைய நாம் என்ன செய்ய வேண்டும்.

- இயேசு கிறிஸ்துவுடன் நெருங்கிய, அன்யோன்யமான உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- ஒரு சிலரை தெரிந்தெடுத்து, சீஷத்துவத்தில் ஈடுபடுவதில் நமது நேரத்தை முதலீடு செய்யவேண்டும்.
- நாம் ஊழியம் செய்யும் மக்கள், கிறிஸ்துவின் சிந்தையில் வளர பொறுமையாக காத்திருக்க கற்றுக் கொள்ள வேண்டும்.
- நமக்கு தெரிந்த, அறிமுகமானவர்கள் பலனடைய, ஆவிக்குறிய கூட்டங்களை ஒழுங்கு செய்தல்.
- வெற்றி பெற்றவர்களாக நம்மை வெளிக்காட்டிக்கொள்வதைவிட, எல்லா வற்றிலும் உண்மையாக இருத்தலையே தேர்ந்தெடுத்தல்.
- பரிசுத்த ஆவியானவரால் பரிசுத்தமாக்கப்படுவதற்காக எவ்வித வலியையும் பொறுத்துக்கொள்ள ஆயத்தமாகுதல்.

அன்புள்ள ஆண்டவரே, உமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருந்து வாழ, மெய்யான திராட்சைச் செடியாகிய உம்மில், ஐக்கியப்பட்டுள்ள ஒரு சிறிய கிளை நான்.

ஆவிக்குறிய வாழ்வில் மேலும் வளர்வதற்கு, களை எடுக்கப்பட்டும், வலிகள் நிறைந்த பாதை ஊடாக சுத்திகரிக்கப்பட்டுள்ளேன் என்பதை நன்கு உணர்ந்துள்ளேன்.

இயேசுவே, நீர் என் இருதயத்தில் விதைக்கப்பட்டுள்ள விதையானது, பிரார்த்தனையால் நீர் பாய்ச்சப்பட்டு, தேவ வார்த்தையினால் வேர் ஊன்றப்பட்டு, பரிசுத்த ஆவியால் உருவாக்கப்பட்டு, என் வாழ்வாக அவதரித்துள்ளீர் என்பதை நான் உணர்கிறேன்.. ஆமென்.

# சக தலைவர்களுடன் இணைந்து செயல்படும் தலைவர்கள் LC-8

திரித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட தலைவர்களுக்கான பண்பினையுடைய கூட்டுத் தலைமையை பின்பற்ற விரும்புகிறேன்.

**I கொரிந்தியர் 3:5-8.** 5. பவுல் யார்? அப்பொல்லோ யார்? **கர்த்தர்** அவனவனுக்கு அருள் அளித்தபடியே நீங்கள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரர்தானே. 6. நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், தேவனே விளையச்செய்தார். 7. அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும். 8. மேலும் நடுகிறவனும் நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள்; அவனவன் தன்தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப் பெறுவான்.

போட்டி மனப்பான்மையில் ஊழியம் செய்யும் மன நிலையிலிருந்து, இணைந்து ஊழியம் செய்யும் மன நிலைக்கு மாற நமது வாழ்வில் நாம் என்ன மாற்றங்கள் கொண்டு வரவேண்டும்.

- கடவுளின் ராஜ்ஜியத்தைக் கட்டுவதற்கான மிகப் பெரிய தரிசனத்திற்காக, எனது சிறிய லட்சியங்களை விட்டுக்கொடுத்தல்.
- நமது புகழ்சிக்காக அல்லாமல், கடவுளின் நாம மகிமைக்காக மட்டுமே ஊழியம் செய்தல்.
- நமது உண்மையையும், உத்தமத்தையும் அங்கீகாரித்து நமக்கு வெகுமதி வழங்கும் ஆண்டவரிடம் நித்திய வெகுமதியை பெற்றுக் கொள்ள ஊழியம் செய்ய வேண்டும்.
- நமது ஊழியப் பாணியிலிருந்து வேறுபட்டு, வித்தியாசமான ஊழியப் பாணியில் பணி

செய்பவர்களுடன், பொருமையாக பணியாற்ற கற்றுக்கொள்ள வேண்டும்.

- சக ஊழியர்களின் வெற்றிக்கு உழைக்கவும், உறுதுணையாக இருக்கவும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

- தேவ ரஜ்ஜிய வளர்சிக்கான கூட்டு முயற்சிக்கு, தாராளமாகவும், உதாரத்துவமாகவும் தங்களின் பங்கை வழங்கவும்.

அன்புள்ள இறைவா, சக ஊழியர்கள் என்னை பயன்படுத்த முடியாமல் தடுக்கும் எனது பெருமை குணத்தை உடைத்தருளும்.

மனிதர்களின் அன்பையும், ஆதரவையும் இயேசு கிறிஸ்து எப்படி மதித்து ஏற்றுக் கொண்டாரோ, அப்படியே நானும் செயல்பட எனக்கு கிருபை தாரும்.

இயேசு கிறிஸ்துவைப் போல் என் வாழ்கை முழுவதும் பணி எனும் குணாதிசயத்தை உடுத்திக்கொள்ள உதவும்.

நான் மற்றவர்களை அங்கீகரிக்கவும், மதிக்கவும் கற்றுக் கொள்ளவதினால் உருவாகும் மகத்துவத்தை பார்க்க எனக்கு உதவி செய்யும்.

ஆண்டவரே, உமது ஊழியர் கள் ஒன்றுபட்டால், பெரிய காரியங்களை காணமுடியும் என்பதை உணர்ச்செய்யும்.

ஆண்டவரே, எங்களின் கண்களைத் திறந்தது உம்மில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரை கண்டு உணரச்செய்யும்.

பல்வேறுபட்ட ஊழியப் பாணியில் நாங்கள் ஈடுபட்டிருந்தாலும், ஒரே மெய்யான தேவனின் பொதுவான பணியில் மட்டுமே நாங்கள் ஈடுபட்டுள்ளோம் என்பதை மனதில் உணர்ந்து உழைக்க உதவி செய்யும்.

உமது ராஜ்ஜியம் வருவதைக்காண, உமது அன்பு எங்களைப் பிணைத்து, அனைவரையும் ஒருங்கிணைத்து வழிநடத்தட்டும். ஆமென்.

# ஆண்டவர் நம்பி தரும் பணத்தை உத்தமமாய் கையாளும் தலைவர்கள் LC-9

கடவுளுக்கும், மனிதர்களுக்கும் முன்பாக, பாவப்பழிக்கு அப்பாற்பட்டு என்னிடம் ஒப்படைக்கப்பட்ட நிதியைத் தாழ்மையுடன் கையாள ஆண்டவரிடம் கிருபையை இரைஞ்சுகிறேன்.

**Iதீமோத்தேயு6:9-11**.9.ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். 10. பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள். 11. நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு.

- கடவுளின் பணத்தை தவறாக கையாளத் தூண்டும் சோதனையை தவிர்க்க, நமது நடைமுறைகளில் மாற்றங்கள் கொண்டு வரவேண்டும்.

- ஊழியத்திற்காககொடுக்கும் நன்கொடையாளர்களின் நோக்கத்திற்கு ஏற்ப நன்கொடைகளை பயன்படுத்துவதை உறுதிப்படுத்தவும்.

- பொருளாசை, பண ஆசையில் சிக்கிக் கொள்ளாதவறு நமது இருதயத்தை தூய்மையாக வைத்து, காத்துக் கொள்ள வேண்டும்.

- ஊழியத்திற்காக வழங்கப்படும் பணத்தினை பயன்படுத்தும் விதத்தில் வெளிப்படைத் தன்மையுடன் இருத்தல்.

- பணமோ எல்லாவற்றிற்கும் உதவும் என்றுதான் வேதம் சொல்லுது, ஆனாலும் பண ஆசைதான் எல்லாத் தீமைக்கும் வேரானது என்பதை நினைவில் வைத்து செயல்பட வேண்டும்.

- யூதாஸ் இயேசுவை காட்டிக்கொடுத்ததும் இந்த பணத்தாசையினாலே, கேயாசி குஷ்டரோகியானதும் இந்த பணத்தின் மீதான மோகத்தினாலே என்பதையும் நினைவில் கொண்டு நடப்போம்.

ஆண்டவரே எனது இருதயத்தின் விருப்பமெல்லாம் உமது அன்பைப் பெற்றுக்கொள்வதாக மட்டுமே இருக்கட்டும்.

உண்மையாகவே, இந்த உலகில் உமது அன்பிற்கு ஈடு இணையாய் வேறு எதுவும் என்னை மகிழ்ச்சி அடையச் செய்ய முடியாது.

தங்களின் பொருட்களையும், செல்வத்தையும் குறித்து மேன்மை பாராட்டும் மக்கள் இலவசமாக கிடைக்கும் உமது தூய அன்பினை ஒருபோதும் ருசிபார்க்க இயலாது.

ஆண்டவர் பணமுள்ள தலைவர்களை அல்ல, நல்ல குணமுள்ள தலைவர்களையே விரும்புகிறீர்.

பற்றாக்குறையின் மத்தியிலும் உமது அன்பின் நிறைவை அனுபவித்து, உண்மையுடனும், தியாகத்துடனும் உமக்கு ஊழியம் செய்ய எனக்கு கிருபை அருளும். ஆமென்.

# ஊழியம் செய்ய புதிய துருத்தியை பயன்படுத்தும் தலைவர்கள். LC-10

நான் என்னைத் தூய்மைப்படுத்திக் கொண்டு, பரிசுத்தத்துடனும், பணிவுடனும் ஆண்டவருக்கு ஊழியம் செய்து, நான் யார் மத்தியில் ஊழியம் செய்கிறேனோ அவர்களும் ஆண்டவரோடு நெருங்கி நடக்க வாஞ்சிக்கிறேன்.

**பிலிப்பியர்2-20-21:** அதேனென்றால், உங்கள் காரியங்களை உண்மையாய் விசாரிக்கிறதற்கு என்னைப்போல மனதுள்ளவன் அவனையன்றி வேறொருவனும் என்னிடத்திலில்லை. 21. மற்றவர்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல், தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள்.

கீழேயுள்ள பட்டியலைப் பயன்படுத்தி, மேலும் திறம்பட ஊழியத்தைத் தொடர எந்த விதமான புதிய ஊழியத்தைத் துருத்தியை தேர்ந்தெடுப்பீர்.

- நமது சூழலுக்கு பொருத்தமான ஊழியத்தை கருத்தில் கொண்டு தேர்ந்தெடுத்தல்.

- ஊழியங்களில் கிறிஸ்து அவற்றின் மையப்பகுதியில் உள்ளாரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல்.

- இதற்கு முன்பு ஈடுபட்டிராத ஊழியத்தை துணிந்து தெரிந்தெடுத்து ஈடுபடுதல்

- பிரபலமான கிறிஸ்தவ தலைவர்களை மட்டுமல்லாது சாதாரண மக்களையும் அணிதிரட்டும் ஊழியமாக இருப்பதை உறுதிப்படுத்துதல்.

- ஊழித்தில் நமது பங்களிப்பு அங்கீகரிக்கப்டுதலும், மதிக்கப்படுதலும் அவசியமானது.

- மாற்றலுக்குவுட்படுத்த முடியாத ஊழியம் அல்லாது, சூழ்நிலைக்கு ஏற்ப வளைந்து கொடுத்து ஊழியத்தில் ஈடுபடுதல் அவசியம்.

ஆண்டவரே, இந்த உலகத்தை நீங்கள் புதைபடிவமாக மாற அனுமதிக்கவில்லை. புதுவிதமான ஊழிங்களைக் குறித்து ஆராய்வதற்கும், பரிசோதனை முயற்சியில் ஈடுபடுவதற்கும், புதுமையான ஊழியங்களை கண்டுபிடித்து அறிமுகப்படுத்துவதற்கும் அழைக்கப்பட்டுள்ளோம். பழைய ஊழிங்களிலிருந்து புதிய ஊழியங்களை உருவாக்கவும், இதுவரையில் கண்டிராத ஊழிங்களை காணவும் நீர் எங்களின் மூளையை வடிவமைத்துள்ளீர். ஆவியானவரே, புதுமையான ஊழியத்திற்கான காற்றினை எமதுபக்கம் வீசச்செய்யும். சாதாரண தலைவர்களெல்லாம் அசாதாரண ஊழிய வெற்றியை அடைய உயரட்டும். தங்களின் பலவீங்களின் கடவுளின் பலத்தையும், எளிமையான வழிகளில் தெய்வீக ஞானத்தையும் கண்டறியட்டும். எங்களின் மீதுள்ள உமது மகிமையின் முத்திரையை அனைவரும் காணட்டும். ஆமென்.